Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 22.7.2025/Script.

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – நாராயணசாமி

தேதி 22.7.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நாடாளுமன்றத்தில் இன்று எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, இரு அவைகளும், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

குடியரசு துணைத் தலைவர் பதவியில் இருந்து ராஜினாமா செய்துள்ள திரு ஜெகதீப் தன்கரின் உடல் நலம் மேம்பட, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை முதல், இங்கிலாந்து மற்றும் மாலத் தீவுகளுக்கு, அரசு முறைப் பயணம் மேற்கொள்கிறார்.

புதுச்சேரியில் அமலாகி வரும், குழந்தைகளுக்கான **Mission Healthy Hearts திட்டம்**, மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது

*நாடாளுமன்றம்-ஒத்திவைப்பு*

நாடாளுமன்ற மழைக் காலக் கூட்டத் தொடரின் 2-ஆம் நாளான இன்றும், எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக அலுவல்கள் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இரு அவைகளும் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. பீகார் மாநிலத்திற்கான சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள், ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை மற்றும் இதர பிரச்சனைகள் குறித்து விவாதம் கோரி, எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. இருஅவைகளிலும் அலுவல்கள், முதலில் 12 மணி வரையிலும், பின்னர் 2 மணி வரையிலும் அதன் பின்னர் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

தன்கர்-மோடி ( 13)

உடல் நலக் காரணங்களுக்காக குடியரசு துணைத் தலைவர் பதவியில் இருந்து ராஜினாமா செய்துள்ள திரு ஜெகதீப் தன்கரின் உடல் நலம் மேம்பட பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். குடியரசு துணைத் தலைவர் பதவி உட்பட பல்வேறு பதவிகள் மூலம் நாட்டிற்கு சேவை புரிய பல வாய்ப்புகளை பெற்றவர், திரு ஜெகதீப் தன்கர் என்று, சமூக ஊடகத்தில் இன்று வெளியிட்டுள்ள பதிவில் அவர் கூறி உள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் பதவியில் இருந்து ராஜினாமா செய்து, திரு ஜெகதீப் தன்கர், குடியரசு தலைவருக்கு எழுதி உள்ள கடிதத்தில், குடியரசு தலைவர், பிரதமர், மற்றும், மத்திய அமைச்சர்கள், பதவிக் காலத்தில் தமக்கு வழங்கிய ஆதரவுக்கு, நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார். 74 வயதான திரு ஜெகதீப் தன்கர், கடந்த 2022-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம், குடியரசு துணைத் தலைவராக பதவி ஏற்றார். அவரது பதவிக் காலம் 2027-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முடிவடைவதாக இருந்தது.

மோடி-பயணம்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை முதல், வரும் 26-ஆம் தேதி வரை, இங்கிலாந்து மற்றும் மாலத் தீவுகளுக்கு, அரசு முறைப் பயணம் மேற்கொள்கிறார். லண்டனில், இங்கிலாந்து மன்னர் **3-ஆம் சார்லஸ்**, அந்நாட்டு பிரதமர் திரு **கியர் ஸ்டார்மர்** ஆகியோரை அவர் சந்திக்கிறார். இந்தியா மற்றும் இங்கிலாந்து வர்த்தக தலைவர்களையும் அவர் சந்தித்து கலந்துரையாடல் நடத்த இருப்பதாக வெளியுறவுச் செயலர் திரு விக்ரம் மிஸ்ரி இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். பிரதமர் திரு நரேந்திர மோடி இங்கிலாந்துக்கு பயணம் மேற்கொள்வது இது 4-ஆவது முறையாகும். இங்கிலாந்தின் **சவுத் ஆம்ப்டன்** பல்கலைக் கழகம் அண்மையில், டெல்லி அருகே **குருகிராமி**ல் கிளை வளாகம் ஒன்றை தொடக்கி இருப்பதும், புதிய கல்விக் கொள்கையின் கீழ் இந்தியாவில் அமையும் முதலாவது வெளிநாட்டு பல்கலைக் கழகம் இதுவாகும் என்பதும்

குறிப்பிடத் தக்கது. பிரதமர் திரு நரேந்திர மோடியின் வெளிநாட்டு பயணம் குறித்து கூடுதல் விவரங்கள் ...............

(வாய்ஸ்)

*மோடி-பயணம்*

(வாய்ஸ்)

பிரதமர் திரு நரேந்திர மோடி இருநாடுகள் பயணத்தின் 2-ஆம் கட்டமாக வரும் 25-ஆம் தேதி மாலத் தீவுகளுக்கு செல்ல இருக்கிறார். மாலத் தீவு அதிபர் திரு **முகமது முயிஸ்சு** அழைப்பின் பேரில் இப்பயணம் மேற்கொள்ளப்படுகிறது. வரும் 26-ஆம் தேதி மாலத்தீவில் நடைபெற உள்ள அந்நாட்டின் 60-ஆவது சுதந்திர தின விழாவில் கவுரவ விருந்தினராக பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்கிறார். **அண்டை நாடுகளுக்கு முதலிடம்** என்பதான இந்தியாவின் கொள்கையிலும், இந்தியாவின் **மகாசாகர்** இயக்கத்திலும் மாலத்தீவுகளுக்கு மிக முக்கிய இடம் இருப்பதும், பிரதமர் திரு நரேந்திர மோடி மாலத் தீவுகளுக்கு பயணம் மேற்கொள்வது இது 3-ஆவது முறை என்பதும் குறிப்பிடத் தக்கது.

*முர்மு*

நாடு மற்றும் சமுதாயத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். புதுடெல்லி குடியரசு தலைவர் மாளிகையில் இன்று நடைபெற்ற விழாவில், குடியரசு தலைவரின் 52-ஆவது சாரண-சாரணியர் விருதுகளை வழங்கிப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். சாரண-சாரணியர் இயக்கம் போன்ற அமைப்புகள் இளைஞர்களிடையே தன்னலமற்ற சேவை உணர்வையும், தார்மீக மதிப்பீடுகளின் அடிப்படையிலான தேசப் பற்றையும் விதைப்பதாக அவர் தெரிவித்தார். ஆண்-பெண் சமத்துவத்தை மேம்படுத்தும் வகையில், இந்திய சாரண-சாரணியர் இயக்கத்தில், பெண்களின் விகிதம் கணிசமாக இருப்பதையும், அவர் சுட்டிக்காட்டி பாராட்டினார். சமூக சேவை, தலைமைத் துவம் மற்றும் ஒழுங்கு கட்டுப்பாட்டில் சிறந்து விளங்கும் 16 இளநிலை மற்றும் முதுநிலை சாரண-சாரணியர்களுக்கு, குடியரசு தலைவர் இவ்விழாவின் போது, விருதுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்.

நீதிமன்றம்-நோட்டீஸ்

அரசால் ஒப்புதலுக்கு அனுப்பப்படும் மசோதாக்கள் மீது முடிவெடுக்க, குடியரசு தலைவர் மற்றும் மாநில ஆளுநர்களுக்கு காலக்கெடு விதிக்கும் பிரச்சனை குறித்து, உச்சநீதிமன்றம், மத்திய-மாநில அரசுகளுக்கு நோட்டீஸ் அனுப்பி உள்ளது. **தமிழ்நாடு மசோதாக்கள் வழக்**கில் உச்சநீதிமன்றத்தின் 2 நீதிபதிகள் அமர்வு, கடந்த ஏப்ரல் மாதம் வெளியிட்ட தீர்ப்பை தொடர்ந்து, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கடந்த மே மாதத்தில், அரசியல் சாசனத்தின் 103-ஆவது பிரிவின் கீழ், நீதிமன்றத்தின் கருத்துக்கள் குறித்து, அறிக்கை கோரி இருந்தார்.

குழந்தைகள் நலம்

**தேசிய குழந்தைகள் நலத் திட்டத்**தின் கீழ், குழந்தைகளின் உடல் நலக் கோளாறுகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் வகையில், **அப்பல்லோ குழந்தைகள் மருத்துவமனை**யுடன் இணைந்து, புதுச்சேரியில் முதல் முறையாக, கடந்த 2023- ஜூன் மாதம் முதல் அமலாகி வரும் **Mission Healthy Hearts திட்டம்**, மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கூடுதல் விவரங்கள் .........

**(வாய்ஸ்)**

குழந்தைகள் நலம்

**(வாய்ஸ்)**

**Healthy Hearts** திட்டத்தை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி முன்னிலையில் கையெழுத்தாயிற்று. சட்டப்பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் செவ்வேள், தேசிய சுகாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் டாக்டர் கோவிந்தராஜன், அப்பல்லோ குழந்தைகள் மருத்துவமனையின் தலைமை இருதய நோய் நிபுணர் டாக்டர் முத்துக்குமரன், **லிட்டில் ஹார்ட் அறக்கட்டளை** அமைப்பின் அறங்காவலர் டாக்டர் சுகன்யா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

Healthy Hearts திட்டத்தின் கீழ் புதுச்சேரியின் அனைத்து 4 பிராந்தியங்களிலும் இதுவரை, 34 இருதய சிகிச்சை முகாம்கள்

நடத்தப்பட்டு, ஆயிரத்து 464 குழந்தைகள் பயன் பெற்றுள்ளதும், இதில் 27 குழந்தைகளுக்கு, சென்னை அப்பல்லோ மருத்துவமனையில், இலவசமாக மேல் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

*வாணிதாசன்*

புதுச்சேரியில், கவிஞரேறு வாணிதாசனார் பிறந்த நாள், அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது. பாரதி பூங்காவில் உள்ள வாணிதாசனார் சிலைக்கு, அமைச்சர்கள் திரு லட்சுமி நாராயணன், திரு ஜான்குமார், அரசுக் கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு சாய் சரவணன் குமார், திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி, திரு லட்சுமி காந்தன் ஆகியோர், மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

*ஸ்டாலின்*

லேசான தலை சுற்றல் காரணமாக நேற்று சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் பின்னர் அப்பல்லோ மருத்துவமனையின் மற்றொரு கிளைக்கு மாற்றப்பட்டு தொடர்ந்து மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளார். அவர் மருத்துவமனையில் இருந்தபடியே அலுவல் பொறுப்புகளை கவனிப்பார் என்று அப்பல்லோ மருத்துவமனை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*மீனவர்-கைது*

இன்று தனுஷ்கோடி மற்றும் தலைமன்னார் அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமேஷ்வரம் மீனவர்கள் நால்வரை, இலங்கை கடற்படையினர் கைது செய்து, மீனவர்களின் படகு ஒன்றையும் பறித்துச் சென்றுள்ளனர். பின்னர் இவர்கள் தலைமன்னாருக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அடுத்த மாதம் ஒன்றாம் தேதி வரை போலீஸ் காவலில் வைக்கப் பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

*வானிலை*

வளிமண்டல மேலடுக்கு சுழற்சிகள் காரணமாக வரும் 28-ஆம் தேதி வரை தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என

சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம் நீலகிரி, தென்காசி, தேனி, மாவட்டங்கள், மற்றும், கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்க கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக் கோட்டை, நீலகிரி மாவட்டம் அவலாஞ்சி உள்ளிட்ட இடங்களில் தலா 4 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது. புதுச்சேரியில் 2 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*சதுரங்கம்*

ஜார்ஜியாவில் நடைபெறும் FIDE உலக மகளிர் சதுரங்க சாம்பியன் பட்டப் போட்டிகளில் இன்று நடைபெறும் அரை இறுதி ஆட்டங்களில், இந்தியாவின் கோனேரு ஹம்பி, திவ்யா தேஷ்முக் ஆகியோர் சீன வீராங்கனைகளை எதிர்கொள்கிறார்கள். சாம்பியன் பட்டப் போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பிடிக்கும் வீராங்கனைகள், மகளிர் கேன்டிடேட்ஸ் போட்டிக்கு தகுதி பெறுவார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது.

*ஹெலிகாப்டர்*

இந்திய ராணுவத்திற்காக, அமெரிக்காவிடம் இருந்து வாங்கப்பட்டுள்ள முதல் தொகுப்பு அப்பாச்சி ரக ஹெலிகாப்டர்கள் இன்று இந்தியா வந்து சேர்ந்துள்ளன. வான் பீரங்கி என்றே அழைக்கப்படும் இந்த கனரக ஹெலிகாப்டர்களில் சென்சார் கருவிகள் மற்றும் அனைத்து பருவங்களுக்கு ஏற்ற பல்வேறு நவீன வசதிகள் இடம் பெற்றுள்ளதும் இப்புதிய ஹெலிகாப்டர்களின் வரவினால் இந்திய ராணுவத்தின் வான்வழிப் போர்த் திறன், கணிசமாக மேம்படும் என்பதும் குறிப்பிடத் தக்கது.

*மாண்டவியா*

செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில் நுட்பங்களின் காலத்திலும், மனித சக்தி மற்றும் உழைப்பாளர்களுக்கான தேவை நீடிக்கவே செய்வதாக, மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், தொழிலக

உறவுகள் பற்றிய 3-ஆவது உலக உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர், தொழிற்சாலைகள், தொழிலாளர் சங்கங்கள் மற்றும் அரசுக்கிடையே ஒத்துழைப்பு இருந்தால் தான், தொழிலாளர் நலன் மேம்படும் என்றார். ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின் படி, நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் 17 கோடி வேலை வாய்ப்புகள் உருவாக்கப் பட்டுள்ளதாகவும், இபிஎப் அமைப்பில் புதிதாக 16 கோடி பேர் பதிவு பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். வரவிருக்கும் 5 ஆண்டுகளில், 5 கோடி புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நோக்குடன் அரசு செயல்பட்டு வருவதாக அமைச்சர் மேலும் கூறினார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

நாடாளுமன்றத்தில் இன்று எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, இரு அவைகளும், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

குடியரசு துணைத் தலைவர் பதவியில் இருந்து ராஜினாமா செய்துள்ள திரு ஜெகதீப் தன்கரின் உடல் நலம் மேம்பட, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை முதல், இங்கிலாந்து மற்றும் மாலத் தீவுகளுக்கு, அரசு முறைப் பயணம் மேற்கொள்கிறார்.

புதுச்சேரியில் அமலாகி வரும், குழந்தைகளுக்கான **Mission Healthy Hearts திட்டம்**, மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 22.7.2025/Script.

--------------------------------